# 26 இறைவார்த்தையின் ஒளி

**இந்த உலகிலே இறையரசை ஸ்தாபித்து, அதை நிறைவு செய்வதற்கு, மக்களை அறிவூட்டுவதற்கு இயேசு பலவிதமான கற்பித்தல் முறைகளை உபயோகித்தார். அவற்றுள் போதனைகள் மூலமாக அறிவூட்டுவது ஒரு முறையாகும். இன்று நாம் லூக்கா முன் வைத்துள்ள சமவெளிப் பொழிவு பற்றிக் கற்போம்**

மத்தேயு 5ம், 6ம், 7ம் அதிகாரங்களில் இருக்கின்ற மலைப்பொழிவினூடாக போதிக்கப்பட்ட செய்தி லூக்கா நற்செய்தியிலே 6ம் அதிகாரத்திலே சமவெளிப் பொழிவாக தரப்பட்டுள்ளது.

விசேட ஆசிரியராகக் கருதப்படுகின்ற இயேசு இறையரசின் ஆழமான குணாதிசயங்களை பொதுமக்களுக்கு அரமேய மொழியில் விளக்கிக் கூறினார். இயேசுவின் போதனையைக் கேட்க வந்தவர்களிடம் அவர்கள் வாழும் சுற்றாடல், கடற்கரை, மலை சார்ந்த சம்பவங்களை உவமைகளாகக் கூறி கற்பித்தார். இன்று நாம் இயேசு சமவெளியில் கொடுத்த போதனையைக் கற்போம்.

**வாசிப்போம்**
**லூக்கா 6:20-26**

செல்வத்தை கடவுளின் ஆசீர்வாதத்தின் அடையாளமாகவும் ஏழ்மையை கடவுளின் சாபத்தின் அடையாளமாகவும் யூதர்கள் நம்பியிருந்தார்கள். ஆனால் இயேசு ஏழ்மையை முன்மாதிரியாகக் கொண்டு அதன் ஆன்மீக சத்தியத்தை எடுத்து கூறினார்.

''ஏழைகளே, நீங்கள் பேறு பெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே'' ஏழ்மையானவர்களுக்கு அவர்களின் நிலை புரியும். ஆனால் இறை வார்த்தையின் ஆழம் புரியாவிட்டாலும் இறைவனுடைய கருணையும் இரக்கத்தையும் பெற்றுக் கொள்ளவும் அவருக்குள்ளே தங்கி இருப்பதற்கும் ஏழைகள் பேறுபெற்றவர்கள் இறைவனுக்காக ஏழ்மையாக்கப்பட்டவர்கள் பேறுபெற்றவர்களே. இவ்வுலக வாழ்விலே இறைவனுக்குள்ளே தங்கியிருப்போர் அனைவருக்கும் இறையரசுக்கு உரித்தாகும்.

''இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர்.

ஏனெனில் நீங்கள் பேறு பெறுவீர்கள்'' தங்களுடைய ஆன்மீகத் தேவைக்காக ஏற்படும் பசி நல்லதொரு வாழ்வின் இரகசியமாகும். இந்தக் குறைபாடு முழுமை அடைவதன் மூலம் திருப்தியடைவார்கள்.

''இப்பொழுது அழுது கொண்டிருப்போரா, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழுவீர்கள்.'' தம்முடையது போல பிறரின் குறைபாடுகளைச் செவி மடுத்து தயவும் கருணையும் காண்பிப்பதன் மூலம் திருப்தியடைவார்கள்.

இறையரசிற்காக துன்பமும் வேதனையும், புறக்கணிப்புக்களுக்கும் ஆளான வர்களும் பேறுபெற்றோர்.

## பேறுபெறாதோர்

''செல்வர்களே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள்'' செல்வமற்றவர்களை எழுப்பிவிட தன்னலமற்றவர்களாக அதைச் செலவு செய்யாமல் செல்வத்தைப் பற்றி ஆடம்பரமாக எண்ணுவது ஓர் துர்ப்பாக்கியமாகும். கடவுளுடைய உதவி தேவையில்லை என்று செல்வந்தர்கள் நினைக்குமளவுக்கு சாபம் பெற்றவர்களாவார்.

''இப்போது உண்டு கொழுத்துதிருப்போரே, ஐயோ! உங்களுக்கு கேடு! பட்டினி கிடப்பீர்கள்''. தன்னலத்தின் மிகுதியாய் ஆட்கொள்ளப்பட்டு, உலக போக்கிற்கு அடிமையாகி வாழுகின்றவர், அவ்வாழ்வின் வெறுமையை அனுபவித்தல் துர்பாக்கியமாகும்.

''இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்கு கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள்''. தங்களுடைய வாழ்விலே ஒரு குறையுமில்லை என நினைத்து, கடவுள் தேவையில்லை என நினைத்து வாழ்பவர்கள் துர்பாக்கியத்தை அனுபவிக்க நேரிடும்.

நேர்மையற்ற வாழ்வு வாழ்ந்து, வெளியரங்கமான மேன்மையை முன் வைத்து, புகழ்ச்சியை விரும்புகின்றவர்கள். சாபம் பெற்றவர்கள், தொடர்ச்சியான சுகத்தைத் தேடுகின்ற முறையிலே பாவத்தைச் சுமந்து திரியும் வழியைப்பற்றி இயேசு எச்சரித்துள்ளார்.

**அன்பினாலே சத்துருக்களுக்கு கருணை காட்டல்**

## லூக்கா 6:27-36

அன்பு, கிறிஸ்தவ போதனை, ''அகாபே'' என்ற கிரேக்க சொல்லின் அர்த்த மானது எல்லாத் தடைகளையும் கடந்து பிறருக்கு நன்மை புரிகின்ற அன்பாகும். அது பலனுள்ள செயற்பாடாகும். எங்களுடைய சினேகிதருக்கு அன்பு செலுத்துவது சாதா ரணமாகும். ஆனால் பகைவர்களுக்கு அன்பு செலுத்துவது இலகுவில் காணப்படாத குணாதிசியமாகும். உண்மையான அன்பின் மூலமாக சத்துருக்கருக்கும் அன்பு செய்யக் கூடியதாக இருக்கும். தெரியாதவர்களுக்கு செல்ல வேண்டிய வழியைக் காண்பிப்பது பொருத்தமானதாகும். அன்பின் ஊற்று எமது இறைவனாவார்.

இயேசு கூறிய பொன் மொழிகள் லூக்கா 6:31 இல் என்ன கூறப்பட்டுள்ளன.

**''பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்''.**

இயேசுவின் இந்த உயர்ந்த வார்த்தைகளுக்கு அமைய நாங்கள் நன்மையை வளர்ச்சி அடையச் செய்து, முன்னோக்கிப் பயணித்து, ஒருவருக்கிடையே அன்பினாலே இணைந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

நியாயத் தீர்ப்பைப்பற்றி இயேசு இறையரசின் பிரஜைகளுக்கு சாதாரண அளவுகோல் ஒன்றைக் கொடுத்தார். அதற்குக் காரணம் மற்றவர்களை நியாயம் தீர்ப்பதற்கு எமக்கு உரிமை இல்லாததாகும்.

## லூக்கா 6:37-42

இயேசு கூறிய போதனைக்கு ஏற்ப மற்றவர்களை நியாயம் தீர்ப்பதற்கு முன் எமக்குள்ளே இருக்கின்ற நன்மையற்ற காரியங்களை அகற்ற வேண்டும். அது பிறருடைய சிறிய சிறிய குறைபாடுகளை விடப் பெரிதாக இருக்கலாம். அதனால் இறையரசின் பிரஜைகளின் குணாதிசியங்களுக்கு அமைய இறைவன் எம்மை மன்னித்திருக்கின்றபடியால் நாங்களும் நியாயம் தீர்க்காமல் மன்னிப்பு வழங்க வேண்டும்.

பழங்களின் மூலம் மரத்தை அறிந்து கொள்வது போல எமது செயல்பாட்டின் மூலமாக எமது தனித்துவம் வெளிக்காட்டப்படும். லூக்கா 6:43-45 எமது வாழ்வின் முறை, நடத்தை, பேசும் விதம், ஆகியவற்றை சிறப்பாகப் பேணி, பிறரது கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும். லூக்கா 6:45ம் வசனத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

***‘‘நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பார். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பார். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்’’.***

வீட்டிலே, பாடசாலையிலே பேசுகின்ற, செய்கின்ற அனைத்தும் பற்றி கவனமாக செயல்பட வேண்டும்.

## லூக்கா 6:46-49
## இருவகை அடித்தளங்கள்

***எங்களுடைய வாழ்வின் அடித்தளமாவது என்ன?***

எமது வாழ்வின் அடித்தளமாக அமைவது இயேசுவின் சமவெளிப் போதனைகளாகும். இப்போதனையைக் கேட்டுத் கொண்டிருந்த மக்களின் உள் ளத்தினுள்ளே ஆழமாகப் பதிவு செய்வதற்கு இயேசு இருவகை அடித்தளங்கள் பற்றிய அர்த்தமுள்ள உவமையைக் கூறினார். ‘‘ஆழமாக நிலத்தைத் தோண்டி அத்திவாரம் போடுவதாகும்.’’ அது இலகுவான காரியமல்ல புத்தியுள்ளவன் நிலத்தை ஆழமாகத் தோண்டி அத்திவாரம் போட்டது தனது வீட்டைப் பெலப்படுத்திக் கொள்வதற்காகும்.

எமது வாழ்க்கைப் பயணத்திலே விழுந்துவிடாமல் முன்னோக்கிச் செல்ல இறை வார்த்தையான அடித்தளம் மிகவும் அத்தியாவசியமாகும். வாழ்க்கைப் பாதையில் எமக்கு ஏற்படும் சவால்களை தயங்காமல் முகம் கொடுப்பதற்கு தேவவசனம் சக்தி கொடுக்கின்றது. இச்சமவெளிப் போதனை இறையரசின் பிரஜைகளின் வாழ்வின் தொடர்ச்சிக்கு அர்த்தமுள்ளதாக விளக்கப்படுகின்றது. இதற்கு ஏற்றதாக இயேசு எம்மிடம் எதிர்பார்ப்பது நல்லதொரு வாழ்க்கை முறையை நாம் பின்பற்றுவதாகும். உலகம் மெச்சுகின்ற பெறுமதிகளுக்கு அப்பால் சென்று இந்த மேலான போதனையை எல்லா யுகங்களில் வாழுகின்ற பிரஜைகள் பின்பற்றுவது கடினமாக இருந்தாலும் அதன்படி வாழ முயற்சி செய்தல் சவால் நிறைந்த ஒன்றாகும்.

### செயற்பாடு

1. செல்வம் மற்றும் ஏழ்மை குறித்து இயேசு முன்வைத்த இறையரசின் விழுமியங்கள் என்ன?

2. சிறியவர்களுக்கு தீங்கு செய்பவர்கள் குறித்து இயேசு கொடுத்த எச்சரிக்கையை நாம் செயல்படுத்த வேண்டும்?